## மலையேற்ற வழிகாட்டிகளுக்கு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி

# தமிழ்நாடு மலையேற்றத் திட்டம் - இணையவழி மலையேற்ற முன்பதிவுத் தளம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மலையேற்றத் திட்டத்தினை (TREK TAMIL NADU) தொடங்கி வைத்து, பொதுமக்கள் இணையவழி வாயிலாக முன்பதிவு செய்வதற்கான www.trektamilnadu.com என்ற வலைதளத்தினைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, துணை வனப் பாதுகாவலர் மற்றும் சிறப்பு பணி, தமிழ்நாடு வன அனுபவக் கழக அலுவலர் விஸ்மிஜு விஸ்வநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக். 25 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மலையேற்றத் திட்டம் (TREK TAMIL NADU) மற்றும் இணைய வழி மலையேற்ற முன்பதிவு தளத்தை தொடங்கி வைத்து, வழிகாட்டி களுக்கு சீருடைகள், மலையேற்றக் காலணிகள், திசைக்காட்டி உள்ளிட்ட மலையேற்ற உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உள்ள 40 அழகிய, மலையேற்ற வழித்தடங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு மலையேற்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார். மேலும் இத்திட்டத்தின் இலச்சினையினை வெளியிட்டு, இணையவழி முன்பதிவிற்காக www.trektamilnadu.com என்ற பிரத்யோக வலைதளத்தையும் தொடங்கி வைத்தார்.

**இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டம்!**

இத்திட்டம் தமிழ்நாட்டின் வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகளில் நிலையான முறையில் மலையேற்றம் மேற்கொள்வதை ஒரு நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு வன அனுபவக் கழகம் (TNWEC) மற்றும் தமிழ்நாடு வனத்துறையின் (TNFD) கூட்டு முன்னெடுப்பில் உருவாக்கப் பட்டுள்ளது.

இயற்கை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தவும் வனப்பகுதியை ஒட்டியுள்ள உள்ளூர் மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தவும், வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பிற்கு வலுசேர்க்கும் விதமாக இந்த 'தமிழ்நாடு மலையேற்ற திட்டம்' வடிவமைக்கப் பட்டுள்ளது.

வனப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்களை இத்திட்டத்தில் அதிக அளவில் ஈடுபடுத்தும் இம்முயற்சி மாநிலத்தில் சூழல் சுற்றுலாவை வலுப்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும். இவ்வாறு வாகன பயன்பாடு இல்லாத குறைந்த கார்பன் தடம், நிலைத்தன்மை கொண்ட சுற்றுலாவை ஊக்குவிப்பது, சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் பசுமைச் சூழல் பாதுகாப்பதில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள உறுதித்தன்மையை காட்டுகிறது.

**14 மாவட்டங்களில் மலையேற்றப் பாதைகள்!**

இயற்கை ஆர்வலர்களை மகிழ்விக்கும் விதமாக, இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு அரசு 40 தேர்ந்தெடுக்கப்பட்ட மலையேற்ற பாதைகளை பொது மக்களுக்காக திறந்து வைத்துள்ளது. சுற்றுலாவில் நாட்டின் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இயற்கை ஆர்வலர்களால் பெரிதும் போற்றப்படும் வகையில் தமிழ்நாட்டில் மொத்தம் ஐந்து புலிகள் காப்பகங்கள், ஐந்து தேசிய பூங்காக்கள், பதினெட்டு வனவிலங்கு சரணாலயங்கள், பதினேழு பறவை சரணாலயங்கள் மற்றும் மூன்று பாதுகாப்பு காப்பகங்களை கொண்டுள்ளது. நீலகிரி, கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி போன்ற பிரபலமான சுற்றுலா தலங்களை உள்ளடக்கி தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் உள்ள மலையேற்றப்பாதைகள், தமிழ்நாடு வனத்துறையால் தமிழ்நாடு வன மற்றும் உயிரின (மலையேற்ற ஒழுங்குமுறை) விதிகள் 2018ன் கீழ் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

மலையேற்ற வழிகாட்டிகளாக காடுகள் குறித்த பாரம்பரிய அறிவைக் கொண்ட, 50க்கும் மேற்பட்ட பழங்குடியின மற்றும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களிலிருந்து 300க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அடையாளம் காணப்பட்டு, மலையேற்ற வழிகாட்டிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வன ஒழுக்கம், திறன் மேம்பாடு, முதலுதவி, விருந்தோம்பல் மற்றும் சுகாதாரம், பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றில் போதுமான தொழில்முறை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மலையேற்றத்திற்கு வரும் ஆர்வலர்களின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மலையேற்ற வழிகாட்டி களுக்கு அவசர நிலைகளைக் கையாளுவதற்கான பாதுகாப்பு நெறிமுறை பயிற்சி களும் வழங்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு சீருடைகள், மலையேற்றக் காலணிகள், முதுகுப்பை, தொப்பி, அடிப்படை முதலுதவிப் பெட்டி, தண்ணீர் குடுவை, வெந்நீர் குடுவை, மலையேற்றக் கோல், தகவல் தொடர்பு சாதனங்கள், விசில் மற்றும் திசைக்காட்டி ஆகியவை அடங்கிய மலையேற்ற உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பழங்குடியின - வனங்களை ஒட்டி வாழும் மக்களுக்கு பாதுகாப்பு!**

மேலும், இத்திட்டத்தின் கீழ் மலையேற்றம் மேற்கொள்ளும் அனைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகளுக்கும் காப்பீடு வழங்கப்படுகிறது. பழங்குடியின மற்றும் வனங்களை ஒட்டியுள்ள மக்கள் நிலையான வருமானம் ஈட்டவும் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் இந்த முன்னெடுப்பு உதவும்.

பொது மக்களுக்கு முன்பதிவு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிபடுத்தும் வகையில், தொடங்கப்பட்டுள்ள (www.trektamilnadu.com) பிரத்யேக முன்பதிவு வலைதளத்தின் மூலம் மலையேற்றம் மேற்கொள்பவர்கள் தங்கள் முன்பதிவினை எளிதாக செய்ய உதவும் வகையில் புகைப்படம், காணொளிக்காட்சிகள், 3D அனிமேஷன். மலையேற்ற பாதைகள் தொடர்பான அத்தியாவசிய விவரங்கள், விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், இவ்வலைதளத்தின் மூலம் மலையேற்றம் மேற்கொள்பவர்கள் 100% இணையவழி பணப்பரிவர்த்தனை மேற்கொண்டு மலையேற்றத்திற்கான நுழைவு சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மலையேற்றத்திற்கான முன்பதிவு மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். 18 வயதிற்குட்பட்டவர்கள் பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்புதல் கடிதத்துடன் மலையேற்றம் மேற்கொள்ளலாம். 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (எளிதான மலையேற்ற பாதைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் துணையோடு மட்டுமே அனுமதிக் கப்படுவர்.

**40 மலையேற்றப் பாதைகள்**

**நீலகிரி மாவட்டம்:** கய்ர்ன் ஹில் (எளிது), லாங்வுட் ஷோலா (எளிது), கரிகையூர் முதல் போரிவரை ராக் பெயிண்டிங் (மிதமானது), கரிகையூர் முதல் ரங்கசாமி சிகரம் (கடினம்), பார்சன்ஸ் வேலி முதல் முக்குர்த்தி குடில் (கடினம்), அவலாஞ்சி - கோலாரிபெட்டா (கடினம்), அவலாஞ்சி (காலிஃபிளவர் ஷோலா) தேவார் பெட்டா (கடினம்), அவலாஞ்சி (காலிஃபிளவர் ஷோலா) கோலாரி பெட்டா (மிதமானது), ஜீன் பூல் (எளிது), நீடில் ராக் (கடினம்).

**கோயம்புத்தூர் மாவட்டம்:** மாணம்போலி (எளிது), டாப் ஸ்லிப் - பண்டாரவரை (கடினம்), ஆலியார் கனால் பேங்க் (மிதமானது), சாடிவயல் - சிறுவாணி (மிதமானது), செம்புக்கரை - பெருமாள்முடி (கடினம்), வெள்ளியங்கிரி மலை (கடினம்), பரலியார் (எளிது).

**திருப்பூர் மாவட்டம்:** சின்னார் சோதனைச்சாவடி கோட்டாறு (எளிது), காலிகேசம் பாலமோர் (மிதமானது).

**கன்னியாகுமரி மாவட்டம்:** இஞ்ஜிக் கடவு (மிதமானது).

**திருநெல்வேலி மாவட்டம்:** காரையார் மூலக்கசம் (மிதமானது), கல்லாறு கொரக்கநாதர் கோவில் (கடினம்).

**தென்காசி மாவட்டம்:** குற்றாலம் செண்பகதேவி நீர்வீழ்ச்சி (எளிது), தீர்த்தப்பாறை (எளிது).

**தேனி மாவட்டம்:** சின்ன சுருளி - தென்பழனி (மிதமானது), காரப்பாறை (எளிது), குரங்கனி சாம்பலாறு (மிதமானது).

**விருதுநகர் மாவட்டம்:** செண்பகத்தோப்பு - புதுப்பட்டி (மிதமானது).

**மதுரை மாவட்டம்:** தாடகை மலையேற்றப் பாதை குட்லாடம்பட்டி நீர்வீழ்ச்சி (கடினம்).

**திண்டுக்கல் மாவட்டம்:** வட்டகானல் - வெள்ளகவி (கடினம்), சோலார் ஆப்சர்வேட்டரி - குண்டாறு (பாயிண்ட்) (மிதமானது), பாயிண்ட் கருங்களம் நீர்வீழ்ச்சி (எளிது).

**கிருஷ்ணகிரி மாவட்டம்:** குத்திராயன் சிகரம் (கடினம்), ஐயூர் சாமி எரி (எளிது).

**சேலம் மாவட்டம்:** குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா - குண்டூர் (மிதமானது), கொண்டப்ப நாயக்கன்பட்டி குண்டூர் (கடினம்), நகலூர் - சன்னியாசிமலை (எளிது).

**திருப்பத்தூர் மாவட்டம்:** ஏலகிரி சுவாமிமலை (எளிது), ஜலகம்பாறை (மிதமானது).

**திருவள்ளூர் மாவட்டம்:** குடியம் குகைகள் (எளிது).

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, துணை வனப் பாதுகாவலர் மற்றும் தமிழ்நாடு வன அனுபவக் கழக சிறப்பு பணி அலுவலர் விஸ்மிஜு விஸ்வநாதன் மற்றும் தமிழ்நாடு வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ரெ. தங்கம் தலைமையில் - தமிழ்நாடு

## மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் நல உதவிகள்!

### ஆர்.எஸ்.பாரதி, த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன், பூச்சி எஸ்.முருகன் வழங்குகின்றனர்!

*சென்னை, அக்.25-*

*தீப ஒளி திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் அதன் மாநில தலைவர் ரெ.தங்கம் தலைமையில் நாளை (26.10.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் தக்கர் பாபா வித்யாலயா வளாகம், வெங்கட் நாராயண ரோடு தி.நகரில் நடைபெறுகிறது.*


தீப ஒளி திருநாளை முன்னிட்டு பரமக்குடி நகர் கழக நிர்வாகிகளுக்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், ஏற்பாட்டில் புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, வடக்கு நகர செயலாளர் செயளாலர் ஜீவரெத்தினம், போகலூர் ஒன்றியக்குழு துணை தலைவர் பூமிநாதன்,நகர் மன்ற உறுப்பினர்கள் மாரியம்மாள் மும்மூர்த்தி,அப்துல்மாலிக், தேவகிட்டு,லண்டன் ரமேஷ், கிருஷ்ணவேணி பழனிகுமார் ,பிரபா சாலமன், ராதாபூசத்துரை, கருப்பையா மற்றும் நகர் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

*நிகழ்ச்சியில் சங்க மாநில பொதுச் செயலாளர் பி. சந்தானகிருஷ்ணன், சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் டி.பி. ரமேஷ்,சங்க வடசென்னை மாவட்ட தலைவர் ஆர்.ஹரி கணேஷ்,சங்க மாநில பொருளாளர் லயன் தி. நகர் பா.சக்திவேல், சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் கே. இள ங்கோவன், தென் சென்னை மாவட்ட செயலாளர் வேளச்சேரி கே.பத்மநாபன், சங்க வட சென்னை மாவட்ட செயலாளர் வி.தர்மலிங்கம், தென் மேற்கு மாவட்ட கழக மகளிர் அணி துணை அமைப்பாளர் சரிதா தங்கம்,சங்க தென் சென்னை மாவட்ட பொருளாளர் ஆர்.சீனிவாசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இம்மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி யில் கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த வேலு எம் எல் ஏ தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தலைமை நிலைய செயலாளர்,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ். முருகன், ஜே கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.*

*இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், எம்.சி,பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலைஎம்.சி, நந்தனம் கி.மதி எம்.சி. எஸ்.முரளி, கோ.சு. மணி பொதுக்குழு உறுப்பினர்,ஜெ. ஜானகிராமன், வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் எஸ். லட்சுமி காந்தன், ஆர்.நெடுஞ்செழியன், கா. குமரேசன் ,கம்பம் சாதிக், வீர. சரவணன், வி.கிருஷ்ண மூர்த்தி, அபுகூதனன்,கே.காந்தி, பொன். கதிரேசன்,ஏ. ரஹ்மத்துல்லாஹ், பா.பிரசாந்த்,கே. துரைராஜ், ஜே. துரை பாபு இரா கோவிந்தராசு, ஆர். லட்சுமண பெருமாள்,வி.ராஜா,வே. ராஜி,பி. பவானி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். என்.ரவிச்சந்திரன்,எம். பெருமாள்,எம். பெரிய சாமி, ஏ. மோகன்ராஜ், எஸ்விவேக், எம்.சுந்தர தேவன், டீ.ஜோஸ்வா, எச். சரஸ்வதி,சி.மனோகரி, ஆர். பச்சையம்மாள், எஸ்.ஜெயபாரதி,மீனா ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.*


தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி அருகே கொண்டமநாயக்கன்பட்டி பகுதியில் சிலுக்குவார் பட்டி கண்மாய்க்கு வரும் நீர் வரத்துப் பகுதிகளை தேனி மாவட்ட ஆட்சியர் ஷஜீவனா மற்றும் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு கம்பம் நகர மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன் புத்தாடை ஸ்வீட் வழங்கினார். உடன் வார்டு கவுன்சிலர்கள், அதிகாரிகள் உடன் இருந்தனர்.